தாமதம் ஆகிறது என்பதற்காக இதை குறிப்பிடுகிறேன். எவ்வளவு மதிப்பீட்டில் இந்தப் பணி நடக்கப் போகிறது? இதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 40 கோடி ஆகும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அங்காடி கட்டுவதற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தாலும், இதைக் கட்டுவதில் ஆண்டுக் கணக்காக காலதாமதம் ஆகிறது. இன்றைய தினம் விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிற காரணத்தால் அதனுடைய மதிப்பீடு உயராதா? ஆகவே அதை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அங்காடிகள் கட்டுவதற்கு நில ஆர்ஜிதம் செய்வதிலே பல ஆண்டு காலமாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தது. சிலர் நீதிமன்றங்களுக்கு சென்றார்கள். அந்த நீதிமன்றங்களுக்குச் சென்ற வழக்குகள் எல்லாம் இன்றைய தினம் திரும்பப் பெறப்பட்டு, எம். எம். டி. ஏ. அதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டு, இப்போது அந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அந்த அங்காடிகள் கட்டி முடிக்கப்படும்.

திருப்பூர் அபிவிருத்தித் திட்டம்

188—(*வினா எண் 963)—திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவியுடன் திருப்பூரில் அபிவிருத்தித் திட்டம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) உலக வங்கி உதவியுடன் ''நகர வளர்ச்சித் திட்டம்'' தமிழ்நாட்டில் 10 நகரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இதில் திருப்பூர் நகரமும் அடங்கும். இத் திட்டத்தின் கீழ் வீட்டுமனைத் திட்டம், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், வழிமுறைப்படுத்தப்பட்ட வளர்ச்சித் திட்டம் மற்றும் போக்குவரத்து நிர்வாகம், சாலை அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் அடங்கும்.

1989 மே 2]

இத்திட்டத்தின் கீழ் திருப்பூர் நகரில் 1,750 வீட்டு மனைகளும், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 800 குடிசை வாழ் குடும்பங்களும் பயனடைவர். இவற்றுடன் நகராட்சி நகர வளர்ச்சி நிதியின் உதவியுடன் புதிய திட்டத்தின் மூலமாக சில சிறப்புத் திட்டங்கள் நகராட்சி அமைப்பு இயக்குநரின் பரிந்துரையின் பேரில் பெறப்பட்டு திட்ட மேலாண்மைக் குழுவின் ஒப்புதலின்படி நகரங்களுக்கு அபிவிருத்தி செய்கின்ற பல்வேறு பணிகள் நடைபெற இருக்கின்றன. அந்தப் பணிகளில் வார அங்காடி, மொத்த விற்பனை அங்காடிகள் அமைத்தல், ஆடு தொட்டிகள் அமைத்தல், பேருந்து நிலையம் மற்றும் ஈஸ்வரன் கோயில் தெருவில் புதிய தின அங்காடிகள் அமைத்தல், பேருந்து நிலையத்தில் கூடுதல் அங்காடி அமைத்தல்; திடக்கழிவு மேன்மைப் படுத்துதல்; சாலைகள் மேம்பாடு செய்தல்; மழைநீர் வடிகால்கள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக திருப்பூர் நகரத்திலே போக்குவரத்துக்கு மிகப் பெரிய நெருக்கடியாக இருக்கிற மிக குறுகிய பாலமாக இருக்கிற ரயில்வே மேம்பாலத்தில் மேலும் ஒரு பாலம் அங்கே விரிவுபடுத்துகின்ற திட்டம் இதில் சேர்க்கப்படுமா என அறிய விரும்புகிறேன்? மிகக் குறுகிய சாலையாக இருக்கிற காரணத்தால் அதிகபடியான மக்கள் தொகை அந்த நகரத்தில் இருப்பதால் மிகக் கடுமையான போக்குவரத்து நெரிசல் காரணமாக பல விபத்துகள் தொடர்ந்து நடைபெறுகிற காரணத்தால் நகர எல்லைகளில் உள்ள அனைத்து ரோடுகளையும் இணைக்கின்ற ஒரு ரிங் ரோடு உருவாக்குகின்ற திட்டம் அதிலே சேர்க்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்து பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக திருப்பூர் நகரத்திலே பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா? அது இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு . ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகாலும், திடக் கழிவு மேம்படுத்தல் போன்ற பணிகளும் நடைபெற இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10 நகரங்கள் என்று சொன்னார்கள். அந்த 10 நகரங்கள் எது எது என்ற விவரம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள நகராட்சிகள், மதுரை, சேலம், கோயம்பத்தூர், திருச்சி, வேலூர், ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர் போன்ற 10 நகரங்கள் ஆகும்.

(முற்பகல் 9-50.)

ஏலகிரி மலையை சுற்றுலா மையமாக்கல்.

177—(*வினா எண் 135)—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏலகிரி மலையை சுற்றுலா மையம் ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்பொழுது செயற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி மலை மாவட்ட உலாத் தலமாக 1980 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் மேம்பாட்டு பணிகளுக்காக சுமார் ரூ. 8 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர்கள் வீடு கட்டிக்கொள்ளக் கடன்.

178—(*வினா எண் 599)—திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்கள் வீடு கட்டிக்கொள்வதற்காக வழங்கப்பட்டு வந்த கடன் தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது என்பதை அரசு அறியுமா ?

(ஆ) கடனைத் தொடர்ந்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?